

செய்திமடல் - 2024-2025



தமிழ்த் திரவியம்



"உயர்தனி செம்மொழியாம்! தன்னிகரில்லா தமிழ்மொழியாம்!"

துறை சுயவிவரம் :

அன்னை எல்கொளஸ்டிக்கா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி -2020 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தமிழ்த்துறையில் இளங்கலைத் தமிழ் பாடப்படிப்பு 2021 ஆம் ஆண்டில் தொடங்கி இரண்டாமாண்டில் பயணித்து வருவதில் மகிழ்ச்சியடைகின்றோம். இத்துறையில் மூன்று உதவிப் பேராசிரியர்கள் பணியாற்றி வந்துள்ளனர். ஒரு பேராசிரியை முனைவர் பட்டம் பெற்றவர். இத்துறை மாணவர்களுக்கு பல்வேறு கருத்தரங்குகள், புதுமையான திறன்கள், பாரம்பரிய விழுமியங்கள், திறமையான கற்பித்தல் முறைகள் மற்றும் பண்பாட்டுக் கலாச்சாரங்களை நடத்துவதன் மூலம் இலக்கியம், மொழித்திறன் மற்றும் ஆளமை மேம்பாட்டுத் திறன்களை வளர்த்துக் கொள்வதில் தமிழ்த்துறை கவனம் செலுத்தி வருகிறது.

தமிழ்த்துறைத் தலைவர்

முனைவர்.வே.மங்களேஸ்வரி

M.A.,M.Phil.,M.A.,B.Ed.,Ph.D.,NET.,PGDCA



உதவிப்பேராசிரியர்கள்

ஆ.மரியசுஜிதாM.A., B.Ed

சி.உமா மகேஸ்வரிM.A.,M.Phil.,B.Ed.,

தே.எப்சிபாM.A., B.Ed

துறைச்செய்தி :

தமிழ்த்துறையின் சிறப்பம்சங்கள் மாணவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு உறுதுணையாக அமைகின்றன. கல்வியின் குறிக்கோள்கள், இலக்குகள், தொலைநோக்குப் பார்வைகள் போன்றவை இடம் பெறுகின்றன. திறமை வாய்ந்த பல்நோக்குடைய அறிவார்ந்த மாணவர்களாக உருவாக்குதல் தமிழ்த்துறையின் முக்கிய நோக்கமாகும். மேலும் தமிழ் இலக்கிய மன்ற விழா,போதைப் பொருள் விழிப்புணர்வுமுகாம் கிறிஸ்துமஸ்விழா, சமத்துவப் பொங்கல் விழா, சுதந்திரதினவிழா, இலக்கியச் சிந்தனைச் செயல்பாடுகள், வார்த்தை விளையாட்டு மற்றும் பல்வேறு தினங்களை முன்னிட்டு உறுதிமொழிகள் மேற்கொள்ளுதல், பெண்கள் தினவிழா, உணவுத் திருவிழா ,வாக்காளர் தின விழா நாட்டு ,நலப்பணித் திட்டத்தில் மாணவர்கள் ஈடுபடுதல்,கல்விச் சுற்றுலாவிற்கு அழைத்துத் செல்லுதல் போன்ற செயல்பாடுகளைத் தமிழ்த்துறை மாணவர்கள் மேற்கொண்டனர் என்பதை இச்செய்தி மடல் விளக்குகிறது.

தமிழ்த்துறையின்குறிக்கோள்கள் :

- தீவு மக்களுக்கு கல்வி அறிவைப் புகட்டிப் பெண்கல்வியை உயர்த்துதல்.
- எதிர்கால வாழ்க்கைக்குப் பெண்கல்வி அவசியம் என்பதை உணர வைத்தல்.
- பெண்கள் பிறரை சார்ந்து வாழாமல் **'தன் கையே தனக்கு உதவி'**என்ற நம்பிக்கையுடன் செயல்பட வைத்தல்.
- மாணவர்களின் திறமைகளைக் வெளிக்கொணர்தல்.
- அப்துல்கலாம் பிறந்த மண்ணில் புரட்சிப் பெண்களை உருவாக்குதல்

தமிழ்த்துறையின் நோக்கக் கூறுகள் :

- தமிழ்மொழியின் முக்கியத்துவத்தை மாணவர்கள் அறிந்து கொள்ளச் செய்தல்.
- பழங்கால மற்றும் நவீனத் தமிழ் இலக்கியத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி மாணவர்களுக்கு அறிவூட்டுதல்.
- மாணவர்களின் திறன் மற்றும் நெறிமுறைகளை ஊக்கப்படுத்துதல்.
- போட்டித் தேர்வில் தமிழில் அதிக மதிப்பெண் பெற ஆயத்தப் படுத்தி அரசு வேலையில் பணியமர்த்த முயற்சித்தல்.
- கைத்தொழில் கற்றுக் கொடுத்து எதிர்கால வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு மாணவர்களை ஊக்கப்படுத்துதல்.
- நல்ல மதிப்பெண்கள் பெற்ற மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்குதல்.
- **'தமிழம்'** என்ற கணிப்பொறி தட்டச்சு பயிற்சியளித்தல்.கணினி அறிவைப் பெற பயிற்சியளித்தல்.
- மாணவர்களின் உள்ளார்ந்த திறமைகளைக் கண்டுபிடித்து பயிற்சியின் மூலம் ஊக்கமளித்து பல்வேறுப் போட்டிகளில் பங்கு பெறச்செய்தல்.
- திறமை வாய்ந்த பல்நோக்குடைய அறிவார்ந்த மாணவர்களை உருவாக்குதல்.

தமிழ்த்துறையின் தொலைநோக்குப் பார்வை:

- ஆக்கப்பூர்வமான சிந்தனை மற்றும் ஆளுமை வளர்ச்சியுடன் தொடர்புத் திறன்களை வளர்த்துக் கொள்ளுதல்.
- நவீன சூழலுக்கேற்ப மனிதநேய அணுகுமுறையுடன் நேர்மறையான அணுகுமுறையை உருவாக்குதல்.

தமிழ்த்துறையின் செயல்பாடுகள்

பெண்கல்விவிழிப்புணர்வு :

தமிழ்த்துறையில் பெண்கல்வி விழிப்பணர்வு முகாம் 13.07.2024 அன்று நடத்தப்பட்டது . இந்நிகழ்வில் பல்துறை இளங்கலை மாணவிகளும், முதுகலை மாணவிகளும் கலந்து கொண்டு பெண்கல்வி தொடர்பான கருத்துக்களை விளக்கி உரை நிகழ்த்தினர். உரை நிகழ்த்திய மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.






பட்டிமன்றம் :

தமிழ்த்துறையில் 12.08.2024 அன்று பெண்களில் சிறந்தவர்கள் கண்ணகியா? மாதவியா? என்ற தலைப்பில் பட்டிமன்றம் நிகழ்த்தப்பட்டது. இந்நிகழ்வில் சிறப்பாக மாணவர்கள் உரை நிகழ்த்தினர். உரை நிகழ்த்திய மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.







இலக்கிய சிந்தனைகள் சார்ந்த வினாடி - வினா :

தமிழ்த்துறையில் இலக்கிய சிந்தனைகள் சார்ந்த வினாடி–வினா 10.10.2024 அன்று நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் இலக்கியம் தொடர்பான கருத்துக்களடங்கிய வினாக்கள் கேட்கப்பட்டன. மாணவிகள் குழுவாக அமர்ந்து பதிலளித்தனர். இந்நிகழ்வு மாணவிகளுக்கு பயனுள்ளதாக அமைந்தது. இந்நிகழ்வு இனிதே நிறைவுற்றது.



தமிழ் இலக்கிய மன்ற விழா :

தமிழ்த்துறையில் 06.12.2024 அன்று தமிழ் இலக்கிய மன்ற விழா நடத்தப்பட்டது. இவ்விழாவில் கல்லூரி செயலர். **அருட்சகோதரி .ரூபி** அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். கல்லூரி துணை முதல்வர் **அருட்சகோதரி. எமல்டாராணி** அவர்கள் தலைமையுரையாற்றினார். இவ்விழாவிற்கு சிறப்புவிருந்தினராக தமிழாய்வுத்துறை .டாக்டர். சாகின் உசேன் கல்லூரி ,இளையான்குடி "தொலைக்காட்சிப் புகழ், நகைச்சுவை நாவலர்"**பேராசிரியர்.கா.அப்துல் ரகீம்** அவர்கள் சிகரம் நம் உயரம் என்ற தலைப்பில் மாணவர்களை இலட்சியப் பாதையில் நடத்தும் வழிமுறைகள் பற்றி உரையாற்றி சிறப்பித்தார். இந்நிகழ்வு தமிழ்த்துறை பேராசிரியை முன்னிலையில் **முனைவர்.வே.மங்களேஸ்வரி** நடத்தப்பட்டது. இந்நிகழ்வை பேராசிரியைகள் மற்றும் மாணவிகள் சிறப்பாக பொறுப்பேற்று நடத்தினர். இந்நிகழ்வு இனிதே நிறைவுற்றது.










போதைஒழிப்புத் தினம் :

அன்னை ஸ்கொலாஸ்டிக்கா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 12.08.24 அன்று போதைப் பொருள் ஒழிப்புத் தினத்தை முன்னிட்டு கல்லூரி, துணை முதல்வர் **அருட்சகோதரி. எமல்டாராணி அவர்கள்** முன்னிலையில் நடைபெற்றது. பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் போதைப் பொருள் பயன்படுத்தமாட்டோம் என்று உறுதிமொழி மேற்கொண்டனர்.போதைப் பொருளுக்கு அடிமையாகும் மனிதர்களை மீட்டெடுப்போம் என்று அனைவரும் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். இந்நிகழ்வு இனிதே நிறைவுற்றது.



சுதந்திரதினவிழா :

76–வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு அன்னை ஸ்கொலாஸ்டிக்கா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 14.08.24 அன்று பல்வேறு போட்டிகள் நிகழ்த்தப்பட்டன. இப்போட்டியில் அனைத்து துறை மாணவிகளும் கலந்து கொண்டு தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர். இந்நிகழ்வு இனிதே நிறைவுற்றது.



மேலும் சுதந்திர தின விழாவை முன்னிட்டு பேராசிரியர்களும் மாணவிகளும் பனை மரக்கன்று நடுதல் நிகழ்வில் கலந்து கொண்டனர். இந்நிகழ்வு இனிதே நிறைவுற்றது.





நுண்கலைத் திறன் போட்டிகள் :

அன்னை ஸ்கொலாஸ்டிக்காகலைமற்றும் அறிவியல் கல்லூரியில் 10.09.24 அன்றுபல்துறைநுண்கலைத் திறன் போட்டிகள் நடத்தப்பட்டன. கல்லூரி செயலர். அருட்சகோதரி .ரூபிஅவர்கள் தலைமைத் தாங்கினர்.. கல்லூரி துணை முதல்வர் அருட்சகோதரி. எமல்டாராணி அவர்கள் சிறப்புரை வழங்கினர். இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக இணைப்பேராசிரியை செவிலியர் கல்லூரி,அருட்சகோதரி. ஆன்டோ சுஜி அவர்கள் வருகை புரிந்து மாணவிகளுக்கு வாழ்க்கையின் நோக்கம் ,மகத்துவம்

பற்றியும் விளக்கி உரை நிகழ்த்தினர். மேலும் இந்நிகழ்விற்கு அருட்சகோதரி. சோபனா, திருமதி .ரேவதி ,நடனாசிரியர் ஆகியோர் கலந்து கொண்டு பரிசுகள் வழங்கி இந்நிகழ்வை சிறப்பித்தனர். இந்நிகழ்வு இனிதே நிறைவுற்றது.





கிறிஸ்துமஸ் விழா :

அன்னை ஸ்கொலாஸ்டிக்கா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கிறிஸ்துமஸ் கொண்டாடப்பட்டது. இவ்விழாவை முன்னிட்டு 23.12.2024 அன்று குடில் அமைக்கும் போட்டியில் தமிழ்த்துறை மாணவிகள் கலந்து கொண்டனர்.





பொங்கல் விழா :

அன்னை ஸ்கொலாஸ்டிக்கா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 12.01.2024 அன்று பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவை முன்னிட்டு பொங்கல் வைத்தல், உரியடித்தல் , கயிறு இழுத்தல் பல்வேறு போட்டிகளில் தமிழ்த்துறை மாணவிகள் கலந்து கொண்டனர்.




கல்விச்சுற்றுலாப் பயணம் :

மாமல்லபுரம் :

தமிழ்த்துறையில் 06.01.2024 அன்று பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க, அவர்களின் அனுமதியோடு முதலாமாண்டு மாணவிகள்,,மூன்றாமாண்டு மாணவிகள் மற்றும் துறைத்தலைவர் முனைவர் வே.மங்களேஸ்வரி ஆகியோர் கல்விச் சுற்றுலாவிற்காக மாமல்லபுரம் சென்று அங்குள்ள ஓவியங்கள், கடல்சார் அருங்காட்சியகம் ,பல்பொருள் அருங்காட்சியகம், திரௌபதிரதம் ,கலங்கரைவிளக்கம் , மாமல்லபுரம் சிற்பங்களடங்கிய பெரியகல் போன்ற இடங்களுக்கு அழைத்துச் செல்வதன் மூலம் மாணவர்கள் கல்வியின் முக்கியத்துவத்தையும் ,புடைசிற்பங்கள் பற்றியும் உணர முடிந்தது.






அறிவியல் தினம் :

அன்னை ஸ்கொலாஸ்டிக்காகலைமற்றும் அறிவியல் கல்லூரியில் அறிவியல் தினம் கொண்டாடப்பட்டது. இத்தினத்தன்று தமிழ்த்துறையில் விவசாய உலகம் என்ற தலைப்பில் இயற்கை விவசாயம் மாதிரிப் படிவம் அமைக்கப்பட்டு கண்காட்சிக்கு வைக்கப்பட்டன. இந்நிகழ்விற்கு இராமநாதபுரம் மாவட்டஆட்சியாளர் சிறப்பு விருந்தினராக வருகை தந்து பார்வையிட்டார் .பல்வேறு பள்ளி மாணவிகளும் வருகை புரிந்து பார்வையிட்டு சிறப்பித்தனர்.





மீன் வளத்துறை பார்வையிடுதல் (CMFRI) :

மீன்வளத்துறைக்கு மாணவர்களை அழைத்துச் சென்று வந்ததன் மூலம் மீன்பிடிப்புமுறை, மீன்வளம் காத்தல், கடல்வாழ் உயிரினங்கள் போன்றவற்றை பற்றிய அறிவைப் பெறுவதற்கும், பல்வேறு கடல்வாழ் உயிரினங்களை அறிந்து கொள்ள மாணவர்களுக்கு பேருதவியாக அமைந்தது.



கலந்துரையாடல் (நிகழ்வு -1)

தமிழ்த்துறையில் 14.02.21024 அன்று **சமூக சீரழிவுக்கு காரணம் ஆண்களா? பெண்களா?** விவாதமேடை ஒருநாள் நிகழ்வு நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் மாணவிகள் அனைவரும் கலந்து கொண்டு தலைப்பிற்கு ஏற்றவாறு தங்கள் கருத்துக்களை விவாதித்து சில கருத்துக்களை ஏற்றுக்கொண்டும் ,மறுப்பு தெரிவித்தும் வந்தனர்.மாணவர்கள் ஆர்வமாக விவாதமேடை நிகழ்வில் பங்கேற்று நிறைவு செய்தனர்.



கலந்துரையாடல் (நிகழ்வு -2)

தமிழ்த்துறையில் 14.03.2025 அன்று **மனித உரிமைகள் சட்டம்** பற்றி ஒருநாள் நிகழ்வு நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் மாணவிகள் அனைவரும் கலந்து கொண்டு தலைப்பிற்கு ஏற்றவாறு இரண்டாமாண்டு மாணவிகள் மனித உரிமைகள் பற்றியும், சட்டம் பற்றியும் விளக்கிக் கூறினர். தங்கள் ஐயப்பாடுகளை மாணவிகள் நிவர்த்தி செய்தனர்..மாணவர்கள் ஆர்வமாக இந்நிகழ்வில் பங்கேற்று நிறைவு செய்தனர்.







பெண்கள் தினவிழா :

பெண்கள் தின விழாவில் தமிழ்த்துறை மாணவிகளும் பேராசிரியைகளும் கலந்து கொண்டனர்.



நாட்டு நலப்பணித் திட்டத்தில் மாணவிகள் பங்குபெறுதல் :

நாட்டு நலப்பணித் திட்டத்தின் மூலம் 23.09.24 அன்று கடற்கரை தூய்மைப் பணியில் சுத்தம் செய்வதில் மாணவிகள் ஈடுபட்டன.



23.01.24 அன்று தனுஷ்கோடி கடற்கரை தூய்மைப் பணியில் சுத்தம் செய்வதில் மாணவிகள் ஈடுபட்டன.





கல்லூரி வளாகம் சுத்தம் செய்தல்:

நாட்டு நலப்பணித் திட்டத்தின் மூலம் 08.02.2025 அன்று **கல்லூரி வளாகம் சுத்தம் செய்தல்** பணியில் சுத்தம் செய்வதில் மாணவிகள் ஈடுபட்டன.



நாட்டு நலப்பணித் திட்ட சிறப்பு முகாம் :

04.03.2025 முதல் 10.03.2025 வரை நாட்டு நலப்பணித் திட்ட சிறப்பு முகாமில் மாணவர்கள் கலந்துகொண்டனர்.



தங்கச்சிமடத்தில் தேசிய வாக்காளர் தினம் விழிப்புணர்வு பேரணி எழுச்சியுடன் நடைபெற்றது

தங்கச்சிமடம் ஜன 28

தங்கச்சிமடம் நுகர்வோர் பாதுகாப்பு மையத்தின் 25வ ஆண்டு விழா நிகழ்வாக தங்கச்சிமடத்தில் நுகர்வோர் பாதுகாப்பு மையம் மற்றும் அன்னை ஸ்கொலாஸ்டிகா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நாட்டு நலப்பணித்திட்ட மாணவியர்கள் இணைந்து நடத்திய தேசிய வாக்காளர் தினம் விழிப்புணர்வு பேரணி அலைவரின் பாராட்டையும் பெற்றது.

அன்னை ஸ்கொலாஸ்டிகா கலை மற்றும் அறிவியல் கல்லூரி செயலர் அருட்சகோதரி ரூபி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ராமேஸ்வரம் வட்ட வழங்கல் அலுவலர் நா.சரவணபாலா, தங்கச்சிமடம் நுகர்வோர் பாதுகாப்பு மையம்



தலைவர் உ.பாண்டி, அன்னை ஸ்கொலாஸ்டிகா கலை மற்றும் அறிவியல் கல்லூரி தமிழ்த்துறை தலைவர், நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் முனைவர் வே.மாங்கனேஸ்வரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த விழிப்புணர்வு பேரணியை ராமேஸ்வரம் வருவாய் வட்டாட்சியர் எம்.அப்துல் ஜப்பார் துவக்கிவைத்தார். தங்கச்சிமடம் நுகர்வோர் பாதுகாப்பு மையம் செயலாளர், இந்திய நுகர்வோர் கூட்டமைப்பு மாவட்ட செயலாளர் எம்.தாஸ்டோஸ் நன்றி கூறினார்.

தங்கச்சிமடம் நுகர்வோர் பாதுகாப்பு மையம் பொருளாளர் எம்.தர்மமுத்திரன் மற்றும் அன்னை ஸ்கொலாஸ்டிகா கலை மற்றும் அறிவியல் கல்லூரி பேராசிரியர்கள் பேரணியை ஒருங்கிணைத்து சிறப்பாக வழிநடத்தினர்

வாக்காளர் தினம் :

உலக வாக்காளர் தினத்தை முன்னிட்டு கல்லூரி மாணவர்கள் **"என் வாக்கு என் உரிமை"**தலைப்பில் **யாகப்பா மேநிலைப்பள்ளி முதல் தர்கா மேநிலைப்பள்ளி** வரை வாக்காளர் விழிப்புணர்வுப் பேரணி நடத்தப்பட்டது. பேராசிரியைகள் மற்றும் மாணவிகள் கலந்து கொண்டனர். கல்லூரி செயலர், அருட்சகோதரி .ரூபி அவர்கள் தலைமைத் தாங்கினார்., கல்லூரி துணை முதல்வர் அருட்சகோதரி. எமல்டாராணி அவர்கள் தலைமை வகித்தனர். மேலும் நுகர்வோர் பாதுகாப்பு திட்ட செயலாளர் ஜான்போஸ் அவர்கள் நன்றியுரை கூறி இந்நிகழ்வு இனிதே நிறைவு செய்தனர்.





தமிழ்த்திரவியம்



பெண்கல்வியைப் போற்றுவோம் வாரீர்!